# கேள்விகளால் ஒரு வேள்வி

## மது, போதை பற்றிய ஒரு பரீட்சாத்த நவீன சமூக நாடகம்

எழுத்துரு
உரும்பிராய்,
வி.ஜெகநாதன்

திரை திறக்கும் போது, மேடையின் பின்புலத்தில் சிறிய உயரமான வட்ட வடிவமான பீடத்தில் நீதிதேவதை, செங்கோலில்இணைக்கப்பட்ட, தராசைக் கையில் பிடித்தபடி, சிவப்புத்துணியால் கண்கள் கட்டப்பட்டுஇருக்கவேண்டும். அந்த நீதிதேவதையைச் சுற்றி கதை மாந்தர்கள் அனைவரும் பாத்திரங்களுக்கேற்ப சுற்றியும் அசைந்தும் அசையா நிலையிலும் நிற்க வேண்டும். திரை திறந்ததும் கதை மாந்தர்கள் அசைந்து நீதிதேவதையைச் சுற்றி "அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது போலவே" என்று மூன்றுமுறை பலமாக குரல்கொடுத்து ஓய பாடகன் பாட ஆரம்பித்தல்

பாடகன் :- (பாடல்)

அரசன்! அன்றுகொல்வான்
தெய்வம்! நின்று கொல்லும்
என்பது போலவே..........
நஞ்சு! அன்று கொல்லும்
போதை! நின்று கொல்லும்
நஞ்சு! அன்று கொல்லும்
புகைத்தல் நின்று கொல்லும்
**எவர் இதை உணருவார்?**
**உணர்ந்தெவர் திருந்துவார்?**(2) - அரசன்

போதனை! பலிக்கவில்லை
சாதனை! படைக்கவில்லை....... மூட
நம்பிக்கை மாறவில்லை
**எவர் இதை உணருவார்?**
**உணர்ந்தெவர் திருந்துவார்?(2)** - அரசன்

நீ திருந்து!
உலகம் தான் திருந்தும்
என்பது உண்மையோ?
மேன்மைமிக்க இந்தப் பொய்
மேதைகள் சொன்னதோ? - இதில்
மேன்மைகள் உள்ளதோ?
<u>மேன்மைமிக்க இந்தப் பொய்</u>
<u>ஞானிகள் சொன்னதோ? - இதில்</u>
<u>நியாயங்கள் உள்ளதோ? (2)</u> - அரசன்

ஆயிரம் மேதைகள் பாரினில் தோன்றினார்!
ஆயிரம் ஞானிகள் வாழ்க்கையில் காட்டினார்!
உலகம் திருந்தவில்லை ஏன்?
உலகம் திருந்தவில்லை ஏன்?
மனிதர் திருந்தவில்லை ஏன்?

> பாடகன் கேள்வியின் அபிநயத்துடன்
> அசையா நிலையில் நிற்க
> உரையாளி மேடைக்கு வந்து............

உரையாளி :- (சிரிப்பு) ஹ...... உலகம் திருந்தவில்லை ஏன்? அழுத்தமான, அவசியமான கேள்வி. (உரத்து) உலகம் திருந்தவில்லை ஏன்?.... என்னிடமும் ஒருசில கேள்விகள் இருக்கிறது. (சபையோரை விழித்து) உங்களிடமே கேட்கிறேன். ஒருபொருளை நிறுத்துப்பார்க்க என்ன வேண்டும்?............ம்! தராசு வேண்டாமா? அந்தப் பொருளின் நிறை சரியானதா என்பதை எப்படி அறிவது? தராசு சரியானதாக இருக்கவேண்டாமா? தராசு சரியானதாக இருந்தால் பொருளின் நிறையும் சரியானதாக இருக்கும். தராசு பிழை என்றால் பொருளின் நிறையும் பிழையானதே. அதனால் தராசைச் சரிசெய்தால் பிரச்சினை தீர்ந்துவிடும்.

> இப்பொழுது உரையாளி 1 வந்து பேச ஆரம்பிக்கிறார்.

உரையாளி 1:- நீங்கள் சொல்லுவது சரி. ஆனால் மனிதச் சிக்கல்களை எவ்வாறு அளந்துபார்ப்பது? எந்த அளவுகோலால் மனிதப் பிரச்சினைகளை நிறுத்து பார்ப்பது? மனிதச் சிக்கல்களின் காரணங்களை கண்டுபிடித்து தீர்க்க முடியுமா?

உரையாளி :- அர்த்தமுள்ள கேள்வி. ஏன் என்ற கேள்வி கேட்காமல் வாழ்க்கை இல்லை. கேள்விகள், தேடல்கள், பரிசோதனைகள், மனிதச் சிக்கல்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. .....ஆனால்....... மனிதர்கள் அடிமைகளாகப் பிறக்கிறார்கள்.

உரையாளி1 :- என்ன சொல்கிறீர்? மனிதர்கள் அடிமைகளாகப் பிறக்கிறார்களா? எப்படி?

உரையாளி :- மனிதர்கள் இயற்கைக்கும், சமூக சூழலுக்கும், இனம், மதம், சாதி, நிறம் போன்றவற்றிற்கு அடிமைகளாகவே வாழ்கிறார்கள். இவை மட்டுமா? சித்தாந்தம், வேதாந்தம், கடவுள், விதி, சொர்க்கம், நரகம், மற்றும் தங்கள் சொந்தப் பிறவிக் குணங்களுக்கும் அடிமையாகவே இருக்கிறார்கள். இல்லையா? இந்த அடிமைத்தனங்களிலிருந்து விடுபடாதவரை மனிதர்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழ முடியுமா?

உரையாளி 1 :-புரிந்துவிட்டது...... முற்பிறப்பில் செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்ப, இப்பிறப்பில் மனிதர்கள் விலங்குகளாய், ஏழைகளாய், கோழைகளாய், நல்லவனாய், வல்லவனாய், பிச்சைக்காரனாய், பரதேசியாய், தெருநாயாய், படித்தவனாய், பாமரனாய், கஞ்சனாய், வஞ்சனாய், பொறாமை ஆணவம் கொண்டவனாய், கள்வனாய், கொடுங்கோலனாய், காமுகனாய், விபசாரியாய் பிறக்கிறார்கள் என்று கர்மக்கோட்பாடு அடித்துச் சொல்கிறது. இது உண்மையா? எனின் மனித வாழ்விற்கு அர்த்தம் என்ன? மனிதச் சிக்கல்களுக்கு தீர்வு என்ன?

உரையாளி :- பேய்பிசாசு, மந்திரம், மாயவித்தை, பில்லிசூனியம், செய்வினை

போன்ற கட்டுகளுக்குள் மனிதர்கள் மாட்டுப்பட்டு அவலப்படுகிறார்கள். இவைகளின் உண்மை, பொய் என்ன?

உரையாளி 1 :-விதி! நல்லகூத்தோ, கெட்ட கூத்தோ, மனிதர்களின் ஒவ்வொரு நடத்தையும், அசைவும் விதியின் வசமே நடக்கிறது என்கிறார்கள். ஒரு கையில் சாதகக் குறிப்புடனும், மறுகையில் சீதனப் பொட்டலத்துடனும் மாப்பிள்ளை தேடி அலைவது விதியின் விளையாட்டு என்கிறார்கள். தலை இடித்தால், வீட்டுப் பிரச்சினை என்றால் பிள்ளைப் பாக்கியம் இல்லை என்றால் சாதகக் குறிப்பு பார்ப்பவரிடம் குறிப்பை கொண்டு ஓடுகிறார்கள். இது என்ன?

உரையாளி :- கடவுள்தான் விதியைப் படைத்தார். அவனை இன்றி அணுவும் அசையாது என்று மதவாதிகள் முழக்கமிடுகிறார்கள். எழுதிவைத்த எழுத்தை மாற்ற ஈசனாலும் ஆகாதென்று புலம்புகிறார்கள். இது உண்மை என்றால், பிரச்சினைகளைத் தீர்க்கும்படி கடவுளிடம் விண்ணப்பம் செய்யலாமா? அப்படியாயின் பூசை ஏன்? புனஷ்காரம் ஏன்? வழிபாடு ஏன்? பிராத்தனை ஏன்?

உரையாளி 1 :-அதுமட்டுமா? வள்ளுவனாரும் விதியின் வழிதான் மனிதர்கள் நடக்கிறார்கள் என்கிறார். அவர் விதியை ஊழ் என்று சொல்லால் விளக்குகிறார். வள்ளுவனாருக்கு, கடவுள் வேறு, விதிவேறு. மதவாதிகள்போல் அவர் விதியைக் கடவுளோடு சம்பந்தப்படுத்தவில்லை. அப்படியாயின் யார் சொல்வது சரி? மதவாதிகள் சொல்வதா? அல்லது மதச்சார்பற்ற வள்ளுவர் சொல்லுவதா?

உரையாளி :- "எது நடந்ததோ, அது நான்றாகவே நடந்தது, எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்" என்று வான்புகழ் கொண்ட கோட்பாடு உபதேசம் செய்கிறார். இந்தப் போதனை உண்மையானால் நாம் கடந்த காலத்தில் நையப்புடைக்கப்பட்டது, கொடுமையின் நெருப்பில் கருகிப் போனது, எமது வாழ்வின் அத்திபாரமே

தகர்க்கப்பட்டது எல்லாமே நடக்க வேண்டி இருந்தது. அது நன்றாகவே நடந்தது. இப்போது, நமக்கு நடப்பது நன்றாகவே நடக்கிறது. இனி நமக்கு நடக்கப்போவதும் நன்றாகவே நடக்கும். இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

உரையாளி1:-(சபையோரைப் பார்த்து) இதற்கு நீங்கள், என்ன சொல்கிறீர்கள்? இதை நாம் உண்மை என்று ஏற்றுக்கொண்டால், நமக்கு உரிமைப் போராட்டம் ஏன்? சுதந்திரமேன்? விடுதலையேன்? (மேடையின் பின்புலத்தைச் சுட்டிக்காட்டி) இதோ! இவனைப் பாருங்கள்!

இருவரும் :- நீங்களே தீர்ப்பளியுங்கள்.....! நீங்களே தீர்ப்பளியுங்கள்.....!

அறுவர் :- நீங்களே தீர்ப்பளியுங்கள்.....! நீங்களே தீர்ப்பளியுங்கள்.....! நீங்களே தீர்ப்பளியுங்கள்.....!

இப்பொழுது ஒரு பயங்கரக் குடிகாரன் தள்ளாடி நடந்து வந்து நீதிதேவதைக்கு முன்னால் பேசுதல்.

குடிகாரன் :- ஆயிரம்பேர்வந்தாலும் என்னை அசைக்கேலாது. முருகா! முருகா! முருகா! ...... ஓம், அசைக்கேலாது. (ஒரு சில காலத்துளிகளின் பின்) உங்களுக்கு ரத்தினம் எண்டவரைத் தெரியுமா? அவர் நல்லவர், வல்லவர், அவர் எவரோடும் மூபண்ணுவர். (ஒரு நமுட்டுச் சிரிப்பு) அவர் ஆர்தெரியுமோ? (தன்னைச் சுட்டிக்காட்டி) அவர்தான் இவர், தெரியுதோ? நான் குடிப்பன், வெறிப்பன், திரிவன். அது என்ர சுதந்திரம், அதை ஆரும் கேட்கேலாது. விளங்குதோ? (பாடுதல்) ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு............. ஒரு கோலமயில்..... என்

குடிகாரன் பாடிக்கொண்டே அலங்கோலமாக விழுந்துகிடக்க, நீதிதேவதை திடுக்குற்றுப் பலமாகக் குரல்கொடுக்கிறது.

நீதிதேவதை :- வாருங்கோ! வாருங்கோ!
எல்லாரும் ஓடி வாருங்கோ!
ஓடி வாருங்கோ! ஓடி வாருங்கோ!

நீதிதேவதையின் குரல்கேட்டு பார்வையாளர்கள் மத்தியிலிருக்கும் கதைமாந்தர்கள் அறுவர், மேடையின் இருபுறத்தாலும் ஓடிச்சென்று, நீதிதேவதையையும் குடிகாரனையும் பார்க்க, நீதிதேவதை பேசுதல்.

பாருங்கோ! பாருங்கோ! - இந்த
பரிதாபக் கோலத்தைப் பாருங்கோ!

அறுவரும் விழுந்துகிடக்கும் குடிகாரனைப் பார்த்துவிட்டு கோபமாகப் பேசுதல்.

அறுவர் :- பயங்கரக் குடிகாரன்
குடிச்சுக்குடிச்சுக் குடும்பத்தையும்
குட்டிச்சுவராக்கிய பாதகன்.

நீதிதேவதை :- நீங்கள் எல்லாம், மனுசர்தான்.
நல்லமனுசர்தான்.
காடேறித்தனமாக
கொட்டிறியள் வார்த்தைகளை
**இவன் குடிச்சு அழிகிறது**
**இவன் செய்யும் குற்றம் மட்டுமோ?**

1. ஆரெண்டு தெரியாமல் - இவன்
ஆரெண்டு தெரியாமல்
ஏன்தானோ அலட்டுறியள்?

நீதிதேவதை :- என்னசொன்னீர்?
அலட்டிறனோ?

2. இவன்ர நித்தக் குடியால
இவன்ர குடும்பம் படுகின்ற
அவலம் உமக்குத் தெரியுமோ?
உழைக்கிறதைக் குடிக்கிறவன்
அயலட்டையோட சண்டை
இழிவான தூஷனைகள்
பேசுகின்ற புழுத்தவாயன்.

3. பிள்ளைகளைக் காகம் போல்
கொத்திக்கொத்திக் கலைக்கிறவன்
பெண்சாதி குறுக்கிட்டால்
தலைமயிரைப் பிடித்திழுத்து
முகத்திலையும், முதுகிலையும்
மொத்தி மொத்தி அடிக்கிறவன்
தெரியுமோ? உமக்குத் தெரியுமோ?

4. குடும்பத்தைப் பொறுப்பாக
பாக்காத பாவி இவன்
வேளைக்குச் சாப்பாடு
சமைக்கவழி செய்யாதவன்.

5. நல்லதுணி மணிகளின்றி
பெண்சாதி பிள்ளைகளும்
சிறுப்பினைப் படுதுகள்
பள்ளிக்கூடம் போகாமல்
பிள்ளைகளும் தவிக்குதுகள்
தெரியுமோ? உமக்குத் தெரியுமோ?
ஊரில இவனுக்கு
சதத்துக்கும் மதிப்பில்லை
மானந்தான் கெடுகிறது.

6. ஆடுமாடு நாய் கோழி

சொத்துபோனால் மனிசருக்கு
நட்டமெண்டு சொல்லலாம்.
இவன்போல மனுசர் செத்தால்
ஆருக்கு என்ன நட்டம்?
தெரியுமோ? உமக்குத் தெரியுமோ?

நீதிதேவதை :- சொல்தெல்லாம் - நீங்கள்
சொல்வதெல்லாம்
பிழையென நான் மறுக்கேல
குடிக்கிறது ஆற்றபிழை?
அதைஎனக்குச் சொல்லுங்கோ

அறுவர் :- (கேலியாக)
இது என்ன விசர்க்கேள்வி?
குடிக்கிறது ஆர்ற பிழை?
குடிக்கிறவன் பிழைதானே?

நீதிதேவதை :- இப்பிடி நீங்கள் கேட்டதால
நானும் சில கேள்விகளை
உங்களிடம் கேட்கிறன்.

அறுவர் :- கேளுங்கோ! கேளுங்கோ!

நீதிதேவதை :- குடிக்கமது மற்றும் கள்ளு
எங்கிருந்து வருகிது?
போதைவஸ்தும் கஞ்சாவும்
எப்படித்தான் வருகிது?
மனுசருக்குத் தீமை செய்யும்
பானம், பொருள் எனத்தெரிந்தும்
எதுக்காக இதையெல்லாம்
உற்பத்தி செய்யினம்?

அறுவர் :- நீங்கள் கேக்கும் கேள்வியெல்லாம்

நியாயம்தான் மறுக்கேலை,
நாங்களெல்லாம் இப்படியாய்
கேள்வி கேட்க நினைக்கேல.

நீதிதேவதை :- களவெடுத்தால் பிடிக்கினம்
கொலை செய்தால் பிடிக்கினம்
ஊர்ச் சண்டை எண்டாலும்
சட்டத்தை நீட்டினம்,
தற்கொலை முயற்சிக்கும்
கோட்டுக்கு இழுக்கினம்,
விபச்சார விடுதியையும்
சுற்றித்தான் வளைக்கினம்
தண்டனையும் குடுக்கினம்,
குடிச்சுக்குடிச்சு அழிபவனை,
குடும்பத்தைக் கெடுப்பவனை
குட்டி வைக்கச் சட்டமும்தான்
தலையிடுமோ? தடுத்திடுமோ?

அறுவர் :- கேள்விக்குமேல் கேள்வி கேட்டு
மண்டையைத் தான் பிக்கிறியள்.

நீதிதேவதை :- மூலைக்கு முலையெல்லாம்
மதுக்கோவில் கட்டினம்.
ஆழ்கடலைக் கிழித்துவரும்
கப்பலின் கொள்கலத்தில்
போதைவஸ்து வருகிது.
கேரளாக் கஞ்சாவும்
படையெடுத்து வருகிது;
ஆருக்கு நன்மை செய்ய
ஆர் இதைச் செய்யினம்?

1. என்னபதில் சொல்லுவது?
பைத்தியம் தான் பிடிக்கிறது.

ஒருசில கணத்துளிகளின் பின் ஒருவன் (இந்தப் பாத்திரத்திற்குப் பாடகனைப் பயன்படுத்தலாம்.) அத்துமீறி மேடையின் பின்புலத்திலிருந்து வந்துபேசுதல். இந்த ஒருவன் பாத்திரம் தனிநபர் நடிப்புப் பாணியில் ஆற்றப்படுவது நன்று.

ஒருவன் :- என்னை மன்னிக்கவேணும். அழையா விருந்தாளியாக நுழைஞ்சதுக்கு மன்னிக்கவேணும். நீங்கள் பேசினதையெல்லாம் கேட்டுக்கொண்டுதான் நிண்டனான். எனக்குக் கொஞ்சம் அடிச்சால்தான் நியாயம் அநியாயத்தைப்பற்றிப் பேசத்துணிவுவரும். நான் ஒரு சீவல்தொழிலாளி. என்னைப் போல் பலர் சீவல் தொழில் செய்துதான் சீவிக்கினம். குடிக்கக் கூடாது எண்டால் என்னைப்போல் ஆக்கள் சீவிக்கிறது எப்பிடி? எங்கட வயித்தில அடிக்கப் பாக்கிறியளோ?

தென்னை, பனம் கள்ளு இயற்கைப் பானம். இது உடலுக்கு நல்லது. இது ஒரு சாப்பாட்டுப் பானமும்தான்... அந்தகாலத்தில என்ன, இந்தக் காலத்திலயும் கஷ்ரப்பட்டு உடல் உழைக்கிற ஆக்கள் கள்ளைக் குடிச்சிட்டுத்தான் வேலை செய்யினம். அளவோட குடிஎண்டு உபதேசம் செய்யினம். இந்த..... அளவோட எண்டதை...... ஆர் தீர்மானிக்கிறது? அதைமுதலில எனக்குச் சொல்லுங்கோ?

நீதிதேவதை :- நீங்கள் கேட்கிற இந்தக் கேள்வி
நியாயமான கேள்விதான்.
மதுபானம் கள்ளுப்போன்ற
குடிவகைகள் எல்லாமே
மனுசருக்கு உற்சாக உணர்ச்சியினை
ஊட்டுகிற பானந்தான்.
அளவோட குடிச்ச பிறகும்
இன்னும் கொஞ்சம் அடிச்சால் என்ன
எண்டு தூண்டும் போதைதான்.
அளவோட குடியெண்டது

அவரவரைப் பொறுத்ததெண்டால்
அளவுக்கு மீறிக் குடிப்பவனை
எப்படித்தான் தடுக்கிறது?

அறுவர் :- நியாமான கேள்விதான்
நியாமான கேள்விதான்.

ஒருவன் :- எங்கட சனம் தேத்தண்ணி குடிக்கிறேல. பெரும்பாலான ஆக்கள் சீனித்தண்ணிதான் குடிக்கினம். சீனிக்குத் தட்டுப்பாடு வந்தால் என்ன செய்யினம்? உள்ளங்கையில் சீனியைப் போட்டு நக்கித்தான் குடிக்கினம். இந்தத் தட்டுப்பாடு எண்டது...... ஒரு கட்டுப்பாடு மாதிரித்தான். இந்தத் தட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டியது ஆர்ர பொறுப்பு?

நீதிதேவதை :- அளவோட குடி எண்டது
தனிமனிசனைப் பொறுத்ததெண்டு
எனக்கு எண்ணத் தோன்றேல.
தனிமனிசர் திருந்தினால்
சமுதாயம் திருந்தும் எண்டு
சொல்வதை நான் ஏற்கேல.
சமுதாயம் திருந்தினால்தான்
தனிமனிசர் நடத்தைகளும்
கட்டுக்குள் வரும் எண்டு
என்மனதில் படுகிறது.

ஒருவன் :- உங்களுக்கு ஒண்டுதெரியுமோ?...... ம்!
இந்து..... சைவக் கோவிலுக்க செருப்புக் காலோட போகேலாது. இது ஆர்வைச்ச சட்டம்? ஆர்வைச்ச கட்டுப்பாடு?

அறுவர் :- நெத்தியடி அடிச்சதுபோல்
நெருப்பெடுத்த கேள்விதான்.

ஒருவன் :- கோவில் புனிதமோ அல்லது கோவிலுக்கு போகிற ஆக்களின் மனசு சுத்தமோ அதெல்லாம் வேறகதை. செருப்போட கோவிலுக்கபோய் அதை அசுத்தப்படுத்தக் கூடாது எண்டதுதான் பிரச்சினை. இதைத் தனிமனிசன் தீர்மானிச்சால் அது அதிகாரம்........ அராஜகம்! சமுதாயம் தீர்மானிச்சால் அது ஆசாரம்....... பண்பாடு! இதை மீறமுடியாது. குடிக்கவேணும். குடிச்சிட்டு சந்தோசமா இருக்க வேணும். அளவோட குடிச்சால் அது சந்தோசம். அளவுக்கு மிஞ்சிக் குடிச்சால் அவலந்தான். சோமபானம் குடிச்சவே எல்லாரும்....... குடிக்கக் கூடாதெண்டு உபதேசம் செய்யினம். அரசியல்வாதி என்ன, ஆன்மீக வாதியும் மறைவில வெளுத்துக் கட்டினம். இது பரம இரகசியமோ? இதைப் பற்றி ஒருக்கா யோசியுங்கோ.... நான்வாறன்.

ஒருவன் போனபின் எல்லோரும் சிந்திப்பது போல் பாவனை செய்துகொண்டிருக்க நீதிதேவதை பேசுதல்.

நீதிதேவதை :- மனிசரை நேசிக்க
மனம்கொண்ட மனிசரெல்லாம்
யோசிக்க வேணும் இதை
பாலுக்கும் காவலாய்,
பூனைக்கும் தோழனாய்,
பிள்ளையையும் கிள்ளிவிட்டு
தொட்டிலையும் ஆட்டுகின்ற
செங்கோல் நிமிர்ந்து நிண்டால்
பேய்களும் கூளிகளும்
புற்றுக்குள் வாழுகின்ற
பாம்புகளும் தேள்களும்
வெளிவந்து கூத்தாடும்
கொடுமைகளை ஆர்தடுக்க?

1. மாற்றம் ஒண்டு வேணும் எண்டு

மனதுக்குத் தெரிகிறது.
மனதுக்குத் தெரிந்ததனை
மதிப்பிட்டுச் சொல்வதற்கு
முடியேல எங்களுக்கு.

நீதிதேவதை :- மாற்றம் ஒண்டு வேணுமெண்டு
மனதுக்கு தெரிந்ததே
மகத்தான தொடக்கம் தான்.
கேள்விகளால் கேள்வி செய்து
மாற்றத்தைக் கண்டிடுவோம்.

அறுவர் :- மாற்றமென்றால் என்ன?
மாற்றமென்றால் என்ன?

| |
|---|
| இப்பொழுது உரையாளி மேடைக்கு வந்து குறுக்கிட்டுப் பேசுதல். |

உரையாளி :- பார்க்கிற இடமெல்லாம் கோவில்களாக இருந்தால் கேட்கிற ஓசையெல்லாம் மணியோசையாக இருந்தால் பேய்கூடக் கடவுளைக் கும்பிடும், இல்லையா? இப்படித்தான் மனிதர்கள் சூழலின் கைதிகளாக இருக்கிறார்கள். ஆதியில் கூட்டமாக இருந்து கூட்டாக உழைத்து, கூட்டமாகப் பகிர்ந்து கூட்டாக வாழ்ந்த ஒரு கூட்டுச்சமூகம். காலஓட்டத்தில், கருவிகள் வளர்ச்சியில், கட்டறுந்து, கூட்டறுந்து உலகில் கேடு தலையெடுத்தது. மனிதனை மனிதன் ஒடுக்கவும் அடுத்தவன் உழைப்பை சுரண்டி பிழைப்பதற்குமான சூழல் உருவானது. இந்த அநீதியான சமூகக் கட்டமைப்பினால் உருவான கேட்டை, பாவத்தை ஜென்ம பாவம் என்ற பெயரில் தனிமனிதர் மேல் சுமத்தியதும் இப்படித்தான்.

இந்த அநீதியான சமூக அமைப்பு கள்வனை உருவாக்குகிறது. கள்வன் களவை உற்பத்தி செய்கிறான். விபசாரி உடலை விற்பனை செய்து பிழைக்கிறாள். இப்படித்தான் சமுதாயத்தின் ஒவ்வொரு களத்திலும்

குற்றவாளிகள் உருவாக்கப்படுகிறார்கள். இது நியாயமா? நீதியா?

நீதிதேவதை :- நீங்கள் கேட்ட கேள்விபெரும்
சிக்கலான கேள்விதான்.
போகிறவர் வருபவர்கள்
எல்லாரையும் தான் கேளுங்கோ,
மட்டமான கேள்வி எண்டு
பட்டம் பதவி பெற்றவரும்
எட்டி எட்டி நழுவுகிறார்.

உரையாளி :- அடுத்த வீட்டுக்கதவினிலே துன்பம் வந்து தட்டும்போது, உனக்குந்தான் தட்டுதெண்டு நீ உணர்ந்து கொள்ளாமல் மவுனமாக இருப்பாயானால்..... ! உன்னையுந்தான் காப்பாற்ற கடவுளாலும் முடியாது. இதை ஒருக்கா யோசியுங்கோ, இதை நல்லாய் யோசியுங்கோ! யோசிப்பியளோ?

2. - நாங்கள் என்ன செய்வதெண்டு
நீங்கள் தான் சொல்லவேணும்

நீதிதேவதை :- எய்தவனை விட்டுவிட்டு
அம்பைமட்டும் நோகிறது
அறிவுக்கு ஏற்றதுவோ?
என்ன செய்ய வேண்மெண்டு
கேட்பது இருக்கட்டும்,
நான்கேக்கும் கேள்விக்கு
நீங்கள் பதில் சொல்லவேணும்.

அறுவர் :- கேள்வியைத்தான் கேளுங்கோ
பதிலை நாங்கள் யோசிப்பம்.

நீதிதேவதை :- மட்டுமீறிக் குடித்துவிட்டு - இவன்
மயங்கி விழுந்து கிடக்கிறது
இவன் செய்தகுற்றமா? - இல்லை

மட்டுமீறி இவன்குடிக்க
அனுமதித்த சமுதாயம்
செய்திட்ட குற்றமா?

3. ஏதோ ஒண்டு மனதிற்குள்
நிழல்போல அசைகிறது
நிழல் போல அசைகிறதை
நகல் எடுக்க முடியவில்லை

இப்பொழுது நீதிதேவதை
உணர்ச்சி கொப்பளிக்க
உரத்த குரலில் ........

நீதிதேவதை :- தகதகிட, தகதகிட, தகதகிட தித்தாம்
தகதகிட, தகதகிட, தகதகிட தித்தாம்
தகதகிட, தகதகிட, தகதகிட தித்தாம்
தகதகிட, தகதகிட, தகதகிட தித்தாம்
நீ மாறு நீமாற்று
தானாக நிலை மாறும்
எண்ணத்தை நீமாற்று - ஒளி
வண்ணத்தில் கொடியேற்று!

அறுவர் :- தகதகிட, தகதகிட, தகதகிட தித்தாம்
தகதகிட, தகதகிட, தகதகிட தித்தாம்
தகதகிட, தகதகிட, தகதகிட தித்தாம்
தகதகிட, தகதகிட, தகதகிட தித்தாம்
இப்போது...... நீதிதேவதை உட்பட
எல்லோரும், உரத்த குரலில் பாடுதல்.

எல்லோரும் :- நீமாறு....... நீமாற்று
தானாகநிலை மாறும்
எண்ணத்தை நீமாற்று - ஒளி
வண்ணத்தில் கொடியேற்று!

நிறைவு